10.09.2014

**Pastoral letter No/GR/ 17/ 2014**

## ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

நமது மறைமாவட்டத்தின் நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல ஆலயம் இந்த ஆண்டை ஆலயம் தொடங்கியதன் வெள்ளிவிழா ஆண்டாக கொண்டாடுவது பற்றி அனைவரும் அறிந்த ஒன்றே. "என் அன்பருக்காக நான் குறைவாக துன்புற மாட்டேன்" என வீரக்குரல் எழுப்பிய புனித குழந்தை இயேசுவின் தெரசாவின் வாழ்வு ஆன்மீகத்தால் அதிகமாக ஆட்கொள்ளப்பட்டு " ஆண்டவர் எவ்வளவு வேதனைகளை தந்தாலும் அவற்றை ஏற்று உலகம் வாழ்வு பெற என்னை காணிக்கையாக்குவேன்" எனச்சொல்லி தன்னையே இழந்தவர் புனித அல்போன்சா. 1910-ம் வருடம் ஆகஸ்ட் 19-ம் நாளில் ஜோசப் மேரி தம்பதியரின் நான்காவது குழந்தையாக பிறந்த இவர் பிறந்த மூன்றாவது மாதத்திலேயே தனது தாயை இழந்த காரணத்தினால் பாட்டி மற்றும் பெரியம்மாவால் வளர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே சம்மனசு பிள்ளை என்று அழைக்கப்பட்ட இவர் உலக விருப்பங்களால் தனது வாழ்வில் தாக்கங்கள் ஏற்படாமல் காத்துக் கொண்டு ஒரு புனித வாழ்வு வாழ வேண்டுமென்று தன் மனதை திடப்படுத்திக் கொண்டார். தன் 17 ம் வயதில் பரணிங்ஙானம் பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையில் சேர்ந்த இவர் தனது 26 ம் வயதில் கன்னியர்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ள கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற வார்த்தைப்பாடுகளை தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என உறுதிபூண்டார்.

புனித அல்போன்சா எப்போதும் இறைவனிடம் வேண்டியது "சிலுவைகளை சுமத்தாதே" என்பதல்ல.மாறாக எனது துன்பங்களைத் தாங்கிக் கொள்ள சக்தியையும் பொறுமையையும் தாரும் என்பதாகும். பல்வேறு வியாதிகளினால் அவதிப்பட்ட புனித அல்போன்சா 1946 ம் ஆண்டு ஜுலை 28 ம் நாளன்று இறைவனடி சேர்ந்தார். அல்போன்சம்மாவின் அடக்கச்சடங்கில் பங்கேற்ற வடக்கேல் சுவாமிகள், "அல்போன்சாவுக்காக நீங்கள் அழவேண்டாம் . உங்களுக்காக அல்போன்சம்மா வழி இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள். இவள் ஒரு புனிதை" என்றுச் சொல்லிக் கொண்டு செபம் செய்தார். அல்போன்சாவிடம் அன்புக் கொண்டிருந்த பள்ளிக் குழந்தைகள் கல்லறையைச் சுற்றி வலம் வந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். அல்போன்சம்மாவின் மன்றாட்டினால் பல்வேறு புதுமைகள் நடைபெற்றன. இவை திருச்சங்கத்தின் இறைநூல் பண்டிதர்களால் ஆராய்ந்து நிரூபிக்கப்பட்டன.

1986 பிப்பிரவரி திங்கள் 8ம் நாள் திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் கோட்டயம் வருகை தந்து அல்போன்சம்மாவுக்கு முக்திபேறுபட்டம் வழங்கினார். அல்போன்சாவின் வாழ்க்கை திருச்சபைக்கு மாதிரியும் எடுத்துக்காட்டுமாக அமைந்ததால் திருத்தந்தை

பதினாறாம் பெனடிக்ட் அல்போன்சம்மாவை கத்தோலிக்கத் திருச்சபையின் ஒரு புனிதராக 2008 அக்டோபர் 12 ம் நாள் அறிவித்தார்.

1960 ம் ஆண்டில் கன்னியாகுமரி திருத்தொண்டு பணிகள் தொடங்கும் வேளையில் நாகர்கோவில் பகுதியில் ஏராளமான சீரோமலபார் மக்கள் வாழ்ந்து வந்தனர். 1985 ம் ஆண்டில் அருள்தந்தை டாமியன் துறுத்துமாலில் CMI அவர்கள் தான் தங்கியிருந்த இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து இந்த மக்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளை செய்தார். இங்கு ஒரு ஆலயம் சங்ஙனாச்சரி உயர்மறைமாவட்டத்தின் ஆன்மீக வழிகாட்டுதலில் கீழில் அமைவதற்கான அனைத்து முயற்ச்சிகளையும் அன்றைய பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் மற்றும் கன்னியாகுமரி திருத்தொண்டு பணிகளின் ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை மாத்யூ வாக்கேல் அடிகளார் ஆகியோர் மேற்கொண்டார். அதன் விளைவாக இதன் முதல் பங்கு தந்தையாக 1989 ம் ஆண்டு அருள்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் சங்ஙனாசேரி உயர்மறைமாவட்ட பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் அவர்களால் நியமிக்கப்பட்டார்கள். அவர் இடம் மாறி சென்ற பிறகு 1992 பிப்பிரவரி 14 முதல் அருள்தந்தை மாத்யூ ஓடலானி அவர்கள் பணியாற்றினார்கள். அவரைத் தொடர்ந்து 1993 பிப்பிரவரி 17 முதல் பேருள்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அடிகளார் பங்கு தந்தையாக பணியாற்றி வருகிறார்கள். சிறு அளவில் இருந்த ஆலயம் பேருள்தந்தை தோமஸ் பவ்வத்து பறம்பில் அவர்களால் சீரோமலபார் வழிபாட்டு முறைப்படி புதுப்பிக்கப்பட்டு 1993 ஆகஸ்ட் 13 ம் நாள் சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட பேராயர் மார் ஜோசப் பவ்வத்தில் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. தொடக்க காலத்தில் புனித அல்போன்சா ஆலய வளர்ச்சியில் தற்போதைய உயர்பேராயரும் அன்றைய தக்கலை மறைமாவட்டத்தின் ஆயருமான மேதகு ஜார்ஜ் ஆலஞ்சேரி அடிகளாரின் ஒத்துழைப்பும் பங்கும் குறிப்பிடத்தக்கது. புனித அல்போன்சாவின் புனிதர் பட்ட நிகழ்வுகளுடன் சேர்ந்து 08.11.2008 அன்று நாகர்கோவில் அல்போன்சா பள்ளி வளாகத்தில் வைத்து நடத்தப்பட்ட விழாவில் மதுரை உயர்மறைமாவட்டத்தின் அன்றைய பேராயர் மேதகு பீட்டர் ஃபெர்ணாண்டோ அவர்கள் புனித அல்போன்சாவை மக்கள் வணங்குவதற்கும் அவரின் பரிந்துரை வழியாக கடவுளின் அருளை வேண்டுவதற்குமாக புனித அல்போன்சா ஆலயத்தை திருத்தல ஆலயமாக அதிகாரபூர்வமாக ஆணையிட்டார். அன்றைய நாளிலிருந்தே இத்திருத்தலமானது தன்னை நாடிவரும் அனைவருக்கும் நல்வாழ்வைப் பெற்றுத்தருகின்ற நல் இல்லமாக திகழ்கிறது. புனித அல்போன்சம்மாவின் பரிந்துரையால் ஏராளமான நன்மைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதற்கு அங்கு வந்து செல்லுகின்ற ஆயிரக்கணக்கான மக்களே சாட்சி. அச்சம் மிகுந்து எவரும் நடப்பதற்கு கூட தயங்குகின்ற காடுபோன்றிருந்த, தற்போது திருத்தலம் அமைந்துள்ள அந்த இடம் இன்று எல்லோரும் ஓடி வந்து ஆறுதல் பெற்றுக் கொள்ளுகின்ற ஒரு ஆலயமாக திகழ்கின்றது. புனித அல்போன்சாவின் பரிந்துரையினுடையவும் நிறைந்த பிரசன்னத்தினுடையவும் வெளிபாடுகள் தான் நாம் அந்த இடத்தில் பார்ப்பது. இப்போது இங்கே தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் நவநாள், திருப்பலி மற்றும் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இவ்வாறாக புனித அல்போன்சா வழியாக இறைவன் ஏராளமான நன்மைகளை நமது மறைமாவட்டத்திற்கும் பங்குகளுக்கும் குடும்பங்களுக்கும் தந்துகொண்டிருக்கிறார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எனவே இறைவன் தந்த நன்மைகளுக்கெல்லாம் நன்றி கூறுவதற்காக செப்டம்பர் மாதம் 21 தேதி ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நமது திருச்சபையின் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அடிகளார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டமானது ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மற்ற மறைமாவட்ட ஆயர்கள், பிற சபை மற்றும் சமயத்தலைவர்கள், இறைமக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். நாம் அனைவரும் புனித அல்போன்சாவின் பரிந்துரை வழியாக நன்மைகளை பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள். அனைவரும் ஒன்றிணைந்து இறைவனின் மேன்மையையும் புனித அல்போன்சாவின் மகிமைகளையும் பற்றி சிந்திக்கவும் நன்றி கூறுவதற்குமான ஒரு வாய்ப்பு இது. இதனை ஒரு பேறாக கருதி அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் நான் உங்களை அழைக்கிறேன். பங்கு தந்தையர் மற்றும் அருள்கன்னியர்களுடன் சேர்ந்து ஆலயத்திலுள்ள அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த மறைமாவட்டத்தின் பங்கேற்பும் அங்கு இருப்பதற்கு உறுதிசெய்வோம். ஆறா துயரிலும் மாறா அன்பில் வாழ்ந்த புனித அல்போன்சம்மா அவரை நம்பிச்செல்லும் அனைவருக்காகவும் மன்றாடுவார். புனித அல்போன்சாவின் பரிந்துரை வழியாக நாளும் நலன்களைப் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

(இச்சுற்றுமடலை இம் மாதம் 14 - ம் தியதி திருப்பலிக்கு பின் வாசிக்கவும்)